தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 22-9-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## அறுவடை செய்த சின்ன வெங்காயத்தை உடனே விற்கவும்

சின்ன வெங்காயத்தின் தாயகம் மத்திய மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளாகும். இவை தென்இந்திய சமையலில் ஒரு முக்கியமான காய்கறி உணவு பயிராகும். இந்தியாவிலிருந்து சின்ன வெங்காயம் மலேசியா, இந்தோனேசியா, இலங்கை மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்தியாவின் மொத்த சின்ன வெங்காய உற்பத்தியில் தமிழ்நாடு 90 சதவீதம் பங்களிப்பும் மற்றும் கர்நாடகா 10 சதவீதமும் பங்களிக்கின்றன. மத்திய அரசின் தேசிய தோட்டக்கலை வாரியத்தின் இரண்டாவது முன்கூட்டிய மதிப்பீட்டின்படி 2013-14ல் தமிழ்நாட்டில் வெங்காய சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தி முறையே 0.39 இலட்சம் எக்டர் மற்றும் 4.73 இலட்சம் டன்கள் என கணக்கிடப்பட்டுள்ளது. இந்தியாவின் மொத்த வெங்காய சாகுபடி பரப்பில் தமிழ்நாடு 5 சதவீத பங்களிப்பும், சின்ன வெங்காய சாகுபடி பரப்பில் 70 சதவீதமாகவும் உள்ளது.

தற்போது கரூர், திண்டுக்கல், ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டகளிலிருந்து வரத்து உள்ளது. கடந்த ஏப்ரல் முதல் ஜுன், 2014 வரை நல்ல தரமான சின்ன வெங்காயத்தின் விலை கிலோவிற்கு 22 வரை மட்டுமே விற்பனை செய்யப்பட்டது. இவ்விலை குறைவிற்கான காரணம் சந்தைக்கு கர்நாடகாவிலிருந்து வரும் வரத்து அதிகரித்ததாலும் தமிழ்நாட்டில் இருப்பு வெங்காயத்தின் வரத்து அதிகரித்ததேயாகும். தற்போது நல்ல தரமான சின்ன வெங்காயம் கிலோவிற்கு ரூ.25 முதல் ரூ.40 வரை விற்பனை செய்யப்படுகிறது. இதற்குக் காரணம் கர்நாடகாவிலிருந்து வரும் வரத்து அறுவடையின் போது பெய்த கனமழையினால் ஆகஸ்டு மாத தொடக்கத்திலே முடிவடைந்தது. மேலும், வர்த்தகர்களின் கூற்றுபடி, புரட்டாசி பட்ட விதைப்பிற்குக் தேவையான விதைப்பு சின்ன வெங்காயத்தின் தேவை மற்றும் வரும் மாதங்களில் பண்டிகை தேவை அதிகரிப்பால் சின்ன வெங்காயத்தின் விலை செப்டம்பர் முதல் நவம்பர் வரை ஏற்றத்துடன் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

விவசாயிகள் சந்தை முடிவுகளை எடுக்க ஏதுவாக கடந்த 16 ஆண்டுகளாக திண்டுக்கல் சந்தையில் நிலவிய சின்ன வெங்காயத்தின் விலையை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும், வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம் ஆராய்ந்தது. சந்தை மற்றும் பொருளியல் ஆய்வுகளின் அடிப்படையில், தரமான சின்ன வெங்காயத்தின் விலை அக்டோபர் - நவம்பர் மாதங்களில் கிலோவிற்கு ரூ.30 முதல் ரூ.35 வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. எதிர்பார்க்கப்படும் சின்ன வெங்காயத்தின் ஏற்றுமதி தேவையினாலும் விலை உயர வாய்ப்புள்ளது. டிசம்பர் மாதத்திற்கு பிறகு விலையேற வாய்ப்பில்லாததால், விவசாயிகள், அறுவடை செய்த சின்ன வெங்காயத்தை உடனே விற்க பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள</u>**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641003,
தொலைபேசி -0422-2431405

**<u>தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>**

பேராசிரியர் மற்றும் தலைவர்,
காய்கறிப் பயிர்கள் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641 003,
தொலைபேசி எண் - 0422-6611374 / 0422-6611283

மக்கள் தொடர்பு அலுவலர்